## இனிமையான குழந்தைகளே! இப்போது நீங்கள் ஆசிரியராகி அனைவருக்கும் மனதை வசப்படுத்தக் கூடிய மந்திரத்தை சொல்ல வேண்டும். இது குழந்தைகளாகிய உங்கள் அனைவரின் கடமையாகும்.

கேள்வி: பாபா எந்த குழந்தைகளுடைய எதையுமே ஏற்றுக் கொள்வதில்லை?

பதில்: யாருக்குள் நான் இவ்வளவு கொடுக்கிறேன், நான் இவ்வளவு உதவி செய்ய முடியும் என்ற அகங்காரம் இருக்கிறதோ அவர்களுடைய எதையுமே பாபா ஏற்றுக் கொள்வதில்லை. என்னுடைய கையில் சாவி இருக்கிறது என பாபா கூறுகிறார். வேண்டுமென்றால் நான் யாரை வேண்டுமானாலும் ஏழையாக்குவேன், யாரை வேண்டுமானாலும் பணக்காரனாக மாற்றுவேன், இதுவும் நாடகத்தில் உள்ள இரகசியம். இன்று பணக்காரர் என்ற கர்வம் யாருக்கு இருக்கிறதோ, அவர்கள் நாளை ஏழை யாகி விடுவார்கள். மேலும் ஏழைக் குழந்தைகள் பாபாவின் காரியத்தில் ஒவ்வொரு பைசாவையும் அர்ப்பணித்து பணக்காரர் ஆகிவிடுகிறார்கள்.

ஓம் சாந்தி. நமக்கு புது உலகத்தின் சொத்து கொடுப்பதற்காக தந்தை வந்திருக்கிறார் என ஆன்மீகக் குழந்தைகளுக்கு தெரியும். நாம் எவ்வளவு பாபாவை நினைக்கிறோமோ அவ்வளவு தூய்மையாக மாறுவோம் என குழந்தைகளுக்கு உறுதி இருக்கிறது அல்லவா! எவ்வளவு நாம் நல்ல ஆசிரியராக மாறுவோமோ அவ்வளவு உயர்ந்த பதவி பெறுவோம். பாபா உங்களை டீச்சர் ரூபத்தில் படிக்க வைக்க கற்றுக் கொடுக்கிறார். பிறகு நீங்கள் மற்றவர்களுக்கு கற்பிக்க வேண்டும். நீங்கள் படிக்க வைக்கக் கூடிய ஆசிரியராக நிச்சயம் ஆகிறீர்கள். ஆனால் யாருக்கும் நீங்கள் குருவாக முடியாது. டீச்சராக மட்டும் தான் ஆக முடியும். குருவோ ஒரேயொரு சத்குரு தான். அவர் கற்பிக்கிறார். அனை வருக்கும் சத்குரு ஒருவர் தான். அவர் டீச்சராக மாற்றுகிறார். நீங்கள் அனைவருக்கும் மன்மனாபவ என்பதைக் கற்பித்து வழி காண்பிக்கிறீர்கள். என்னை நினையுங்கள், மேலும் ஆசிரியராகுங்கள் என்ற கடமையை பாபா உங்களுக்கு ஒப்படைத்து இருக்கிறார். நீங்கள் யாருக்கு பாபாவின் அறிமுகத்தைக் கொடுத்தாலும் பாபாவை நினைவு செய்வது அவர்களுக்கும் கடமை ஆகும். டீச்சர் ரூபத்தில் சிருஷ்டி சக்கரத்தின் ஞானத்தை கொடுக்க வேண்டியிருக்கிறது. தந்தையை நிச்சயம் நினைக்க வேண்டும். தந்தையின் நினைவினால் தான் பாவங்கள் விலகிப் போகும். நாம் பாவ ஆத்மாக்கள் என குழந்தைகளுக்குத் தெரியும். ஆகவே தான் பாபா அனைவருக்கும் தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையை நினைத்தால் உங்களுடைய அனைத்து பாவங்களும் விலகும் என கூறுகின்றார். தந்தை தான் பதீத பாவனர். இனிமையான குழந்தைகளே! உங்களுடைய ஆத்மா பதீதமாக இருக்கிறது. இதன் காரணத்தால் சரீரம் கூட பதீதமாகியிருக்கிறது என பாபா சொல்கிறார். முதலில் நீங்கள் தூய்மையாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் தூய்மையை இழந்து விட்டீர்கள். இப்போது அழுக்கிலிருந்து தூய்மையாவதற்கான வழியை மிக எளிதாகப் புரிய வைக்கிறார். தந்தையை நினைவு செய்தால் நீங்கள் தூய்மையாகி விடலாம். உட்கார்ந்தாலும், எழுந்தாலும், நடந்தாலும் தந்தையை நினையுங்கள். அவர்கள் கங்கையில் நீராட வேண்டும் என்றால் கங்கையை நினைக்கிறார்கள். அது பதீத பாவனி என

நினைக்கிறார்கள். கங்கையை நினைப்பதால் தூய்மையாகி விட வேண்டும், ஆனால் யாருமே தூய்மையாக முடியாது என பாபா கூறுகிறார். தண்ணீரினால் எப்படி தூய்மையாவீர்கள்?. நான் தான் பதீதபாவனன் என பாபா கூறுகிறார். குழந்தைகளே! தேகம் உட்பட தேகத்தின் அனைத்து தர்மங்களையும் விட்டு என்னை நினைத்தால் நீங்கள் தூய்மையாகி மீண்டும் முக்திதாமத்தை சென்றடைவீர்கள். முழு கல்பமும் வீட்டை மறந்து விட்டீர்கள். பாபாவை முழு கல்பத்திலும் யாரும் அறியவில்லை. ஒரேமுறை தான் பாபாவே வந்து இந்த (பிரம்மாவின்) வாய் மூலமாக தனது அறிமுகத்தைக் கொடுக்கிறார். இந்த வாயிற்கும் நிறைய மகிமை இருக்கிறது. பசுவாய் என்று கூட கூறுகிறார்கள் அல்லவா. அந்த பசுவோ விலங்காகும். இது மனிதனின் விசயம் ஆகும்.

இவர் பெரிய தாய் என நீங்கள் அறிகிறீர்கள். சிவ பாபா இந்த தாய் மூலமாக உங்கள் அனைவரையும் தத்தெடுக்கிறார். இப்போது நீங்கள் பாபா பாபா எனக் கூறுகிறீர்கள். இந்த நினைவு யாத்திரையினால் தான் உங்களுடைய பாவங்கள் விலகும் என பாபாவும் கூறுகிறார். குழந்தைகளுக்கு தந்தையின் நினைவிருக்கிறது அல்லவா. அவருடைய முகம் இதயத்தில் பதிவா கிறது. ஆத்மாக்களாகிய நம்மை போன்றே பரமாத்மாவும் இருக்கிறார் என குழந்தைகளுக்குத் தெரியும். தோற்றத்தில் எந்த வித்தியாசமும் இல்லை. சரீரத்தின் உறவில் தோற்றம் வேறுபடும், மற்றபடி ஆத்மா ஒன்று தான். நம்முடைய ஆத்மாவைப் போன்று பரமாத்மாவும் இருக்கிறார். பாபா பரந்தாமத்தில் இருக்கிறார். நாமும் பரந்தாமத்தில் வசிக்கிறோம் என குழந்தைகளுக்கு தெரியும். பாபாவின் ஆத்மா மற்றும் நம்முடைய ஆத்மாவிற்கும் வேறு எந்த வித்தியாசமும் இல்லை. அவரும் பிந்துவாக (புள்ளியாக) இருக்கிறார். நாமும் பிந்துவாக இருக்கிறோம். இந்த ஞானம் வேறு யாருக்கும் இல்லை. உங்களுக்கும் பாபா தான் தெரிவித்திருக்கிறார். பாபாவைப் பற்றி என்னென்ன சொல்கிறார்கள். சர்வவியாபி, கல்லிலும் முள்ளிலும் இருக்கிறார். யாருக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்கிறார்கள். நாடகத்தின் படி பக்தி மார்க்கத்தில் தந்தையின் பெயர், ரூபம், தேசம், காலத்தை மறந்து போகிறார்கள். நீங்களும் மறந்து போகிறீர்கள். ஆத்மா தனது தந்தையை மறந்து விடுகிறது. குழந்தை தந்தையை மறந்து விடுகிறது என்றால் வேறு என்ன தெரியும்? ஏழையாகி விடுகின்றனர். செல்வத்தை பற்றிய நினைவே இல்லை. செல்வம் உடையவரின் நடிப்பைக் கூட அறியவில்லை. தன்னையே மறந்து போகின்றார்கள். உண்மையில் நாம் மறந்து விட்டோம் என குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். முதலில் இப்படிப்பட்ட தேவி தேவதையாக இருந்தோம். இப்போது விலங்கை காட்டிலும் கீழான நிலைக்கு வந்து விட்டோம். நாம் முக்கியமாக நம்முடைய ஆத்மாவையும் மறந்திருக்கிறோம். இப்போது யார் புரிய வைப்பார்கள்? ஆத்மாக்களாகிய நாம் என்ன, எப்படி முழு நடிப்பையும் நடிக்கிறோம் என்பது எந்த ஜீவ ஆத்மாவிற்கும் தெரியவில்லை. நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற ஞானம் வேறு யாருக்கும் இல்லை. இச்சமயம் சிருஷ்டி முழுவதும் தமோபிரதானமாகி விட்டது. ஞானம் இல்லை. உங்களுக்குள் இப்போது ஞானம் இருக்கிறது. நாம் ஆத்மா, இத்தனை காலம் நம்முடைய தந்தையை நிந்தித்து வந்துள்ளோம் எனத் தோன்றுகிறது. நிந்தித்ததால் பாபாவை விட்டு விலகி கொண்டே செல்கிறோம். நாடகத்தின் படி ஏணிப்படியில் கீழே இறங்கி வந்து விட்டோம். பாபாவை நினைவு செய்வதே முக்கியமான விசயம் ஆகும். பாபா வேறு எந்த

துன்பத்தையும் கொடுக்கவில்லை. குழந்தைகள் பாபாவை நினைவு செய்யும் கஷ்டம் மட்டுமே. தந்தை குழந்தைகளுக்கு எந்த கஷ்டத்தையாவது கொடுப்பாரா என்ன? அப்படி சட்டம் இல்லை. நான் எந்த ஒரு துன்பமும் கொடுக்க மாட்டேன் என பாபா கூறுகின்றார். ஏதாவது கேள்விகள் கேட்டால் இந்த விசயங்களில் ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்கிறேன். தந்தையை நினையுங்கள். நான் உங்களை அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறேன். ஆகவே குழந்தைகளாகிய நீங்கள் நினைவு யாத்திரையினால் தூய்மையாக வேண்டும். நான் தான் பதீத பாவனர் தந்தை. அவ்வளவு தான். எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். தந்தையை நினையுங்கள் என பாபா வழி கூறுகிறார். 84 பிறவிகளின் சக்கரத்தின் இரகசியத்தையும் பாபா புரிய வைத்திருக்கிறார். இப்போது நாம் பாபாவை எவ்வளவு நினைக்கிறோம் என தன்னையே சோதித்துக் கொள்ளுங்கள். அவ்வளவு தான். வேறு எதைப் பற்றியும் சிந்திக்க தேவை இல்லை. இது மிகவும் எளிதாகும். தந்தையை நினைக்க வேண்டும். குழந்தை சிறிது வளர்ந்ததும் தானாகவே தாய், தந்தையை நினைக்க ஆரம்பித்து விடுகிறது. ஆத்மாக்களாகிய நாமும் பாபாவின் குழந்தைகள். ஏன் நினைவு செய்ய வேண்டியிருக் கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் நம் மீது இருக்கக் கூடிய பாவ சுமைகள் நினைவால் தான் அழியும். ஆகவே தான் ஒரு நொடியில் ஜீவன் முக்தி என பாடப்பட்டிருக்கிறது. ஜீவன் முக்தியின் ஆதாரம் படிப்பாகும். மேலும் முக்திக்கு ஆதாரம் நினைவாகும். எவ்வளவு நீங்கள் தந்தையை நினைக்கிறீர்களோ, படிப்பில் கவனம் கொடுக்கிறீர்களோ அவ்வளவு உயர்ந்த பதவியைப் பெறலாம். வேலை போன்றவற்றை செய்து கொண்டே இருங்கள், பாபா எதையும் தடுக்கவில்லை. தொழில் போன்றவைகளை நீங்கள் செய்கிறீர்கள். அது இரவும் பகலும் நினைவிருக்கிறது அல்லவா! எனவே, இப்போது பாபா இந்த ஆன்மீகத் தொழிலை கொடுக்கிறார்-தன்னை ஆத்மா என உணர்ந்து என்னை நினையுங்கள், மேலும் 84- பிறவியின் சக்கரத்தை நினையுங்கள். என்னை நினைப்பதால் தான் நீங்கள் சதோபிரதானமாக மாறுவீர்கள். இப்போது பழைய உடலாக இருக்கிறது. மீண்டும் சதோபிரதானமான புதிய உடல் கிடைக்கும் என புரிந்து கொள்கிறீர்கள். தன்னுடைய புத்தியில் ஆர்வம் வைக்க வேண்டும். இதன் மூலம் நிறைய நன்மை நடக்கும். பள்ளிக் கூடத்தில் நிறைய பாடங்கள் இருக்கிறது. இருப்பினும் ஆங்கிலத்தில் நிறைய மதிப்பெண்கள் கிடைக்கிறது. ஏனென்றால் ஆங்கிலம் முக்கியமான மொழியாகும். முன்பு அவர்களுடைய இராஜ்யம் இருந்தது. ஆகவே அது அதிகமாக இருக்கிறது. இப்போது பாரதவாசிகள் கடனாளிகளாக இருக்கிறார்கள். யார் எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் நம்முடைய இராஜ்யத்தின் தலைவர்கள் கடனாளிகள் என்பது புத்தியில் இருக்கிறது அல்லவா! அதாவது பாரதவாசிகளாகிய நாம் கடனாளிகள். நாம் கடனாளிகள் என பிரஜைகள் நிச்சயம் கூறுவார்கள் அல்லவா. இதையும் புரிந்துக் கொள்ள வேண்டும் அல்லவா! நீங்கள் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். நாம் அனைவரும் இந்த கடன்களிலிருந்து விடுபட்டு பணக்காரர்களாக மாறுகிறோம். பிறகு அரைக் கல்பத்திற்கு நாம் யாரிடமும் கடன் வாங்க மாட்டோம் என நீங்கள் அறிகிறீர்கள். கடனாளிகள் பதீத உலகத்திற்கு அதிபதிகள். இப்போது நாம் கடனாளிகளாகவும் இருக்கிறோம், பதீத உலகத்தின் அதிபதியாகவும் இருக்கிறோம். நம்முடைய பாரதம் இப்படி இருக்கிறது எனப் பாடுகிறார்கள்

அல்லவா!

நாம் மிகவும் பணக்காரர்களாக இருந்தோம் என குழந்தைகள் அறிகிறீர்கள். இளவரசன், இளவரசிகளாக இருந்தோம். இந்த நினைவிருக்கிறது. நாம் உலகத்திற்கு அதிபதியாக இருந்தோம். இப்போது முற்றிலும் கடனாளியாக பதீதமாகி இருக்கிறோம். இந்த விளையாட்டின் முடிவை பாபா தெரிவித்துக் கொண்டிருக்கிறார். விளைவு என்னவாகியது. குழந்தைகளாகிய உங்களுக்கு நினைவு வந்திருக்கிறது. சத்யுகத்தில் நாம் எவ்வளவு பணக்காரர்களாக இருந்தோம், யார் உங்களை பணக்காரராக மாற்றியது? பாபா தாங்கள் எங்களை எவ்வளவு பெரிய பணக்காரராக மாற்றினீர்கள் எனக் குழந்தைகள் கூறுகிறீர்கள். ஒரு தந்தை தான் பணக்காரராக மாற்றக் கூடியவர். இந்த விசயங் களை உலகத்தில் இருப்பவர்கள் அறியவில்லை. இலட்சக்கணக்கான வருடங்கள் என கூறியதால் அனைத்தையும் மறந்துவிட்டனர். எதையும் அறியவில்லை. இப்போது நீங்கள் அனைத்தையும் அறிந்துக் கொண்டீர்கள். நாம் பல கோடி மடங்கு பணக்காரர்களாக இருந்தோம். மிகவும் தூய்மையாக இருந்தோம். மிகவும் சுகமுடையவர்களாக இருந்தோம். அங்கே பொய், பாவம் எதுவும் இல்லை. முழு உலகத்தையும் நீங்கள் வெற்றி அடைந்தீர்கள். சிவபாபா தாங்கள் என்ன கொடுக்கிறீர் களோ அதை வேறு யாரும் கொடுக்க முடியாது என்ற மகிமையும் இருக்கிறது. அரைக் கல்பத்திற் கான சுகத்தைக் கொடுப்பதற்கு வேறு யாருக்கும் சக்தி இல்லை. பக்தி மார்க்கத்தில் கூட உங்களுக்கு நிறைய சுகம், அளவற்ற செல்வம் இருக்கிறது என பாபா கூறுகிறார். எவ்வளவு வைர வைடூரியங்கள் இருந்தது! பிறகு அவை பின்னால் வரக் கூடியவர்களின் கைகளுக்கு வருகிறது. இப்போது அந்த பொருள்கள் பார்ப்பதற்கு கூட இல்லை. நீங்கள் வித்தியாசத்தை பார்க்கிறீர்கள் அல்லவா! நீங்களே பூஜைக்குரிய தேவி தேவதைகளாக இருந்தீர்கள். பிறகு நீங்களே பூஜாரி ஆகிவிட்டீர்கள். தாங்களே பூஜைக்குரியவர், தாங்களே பூஜாரி. பாபா பூஜாரி ஆவதில்லை. ஆனால் பூஜாரிகளின் உலகத்தில் வருகிறார் அல்லவா! பாபா எப்போதும் பூஜைக்குரியவராக இருக்கிறார். அவர் ஒரு போதும் பூஜாரி ஆவதில்லை. உங்களை பூஜாரியிலிருந்து பூஜைக்குரியவராக மாற்றுவதே அவருடைய வேலை யாகும். உங்களை பூஜாரியாக மாற்றுவது இராவணனின் வேலையாகும். இந்த உலகத்தில் யாருக்கும் தெரியவில்லை. நீங்களும் மறந்து போகிறீர்கள். தினந்தோறும் பாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். யாரை பணக்காரராக மாற்றுவது, யாரை ஏழையாக மாற்றுவது என்பது பாபாவின் கையில் இருக்கிறது. யார் பணக்காரர்களாக இருக்கிறார்களோ அவர்கள் நிச்சயம் ஏழை களாக மாற வேண்டும், மாறுவார்கள் என பாபா கூறுகின்றார். அவர்களின் நடிப்பே அவ்வாறு உள்ளது. அவர்கள் ஒரு போதும் நிலைத்திருக்க முடியாது. நான் இன்னார், இதெல்லாம் எங்களிடம் இருக்கிறது என்று பணக்காரர்களுக்கு அகங்காரம் மிகவும் இருக்கிறது அல்லவா! அவர்களின் கர்வத்தை நீக்குவதற்காக, அவர்கள் ஏதாவது கொடுப்பதற்காக வரும் போது பாபா அவசியம் இல்லை, இதை உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள், அவசியம் ஏற்பட்டால் பிறகு வாங்கிக் கொள் கிறோம் என பாபா கூறுவார். ஏனென்றால் அது பயனளிக்காது, அவர்களுக்குள் கர்வம் இருக்கிறது என்பதை பாபா பார்க்கிறார். வாங்குதல், வாங்காமல் இருத்தல் அனைத்தும் பாபாவின் கையில் இருக்கிறது அல்லவா. பாபா பணத்தை என்ன செய்வார்! அவசியம் இல்லை. குழந்தைகளாகிய உங்களுக்காகத் தான் இந்த கட்டிடங்களை கட்டிக்

கொண்டிருக்கிறார். நீங்கள் வந்து சந்தித்து விட்டுச் செல்லலாம். எப்போதும் இருக்க முடியாது. பணத்தின் அவசியம் இருக்காது. எந்த ஒரு படையோ அல்லது பீரங்கியோ தேவை இல்லை. நீங்கள் உலகத்திற்கே அதிபதியாகிறீர்கள். இப்போது யுத்த மைதானத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் பாபாவை நினைவு செய்வதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தேவை இல்லை. என்னை நினைத்தால் இவ்வளவு சக்தி கிடைக்கும் என பாபா கட்டளை இடுகிறார். உங்களுடைய தர்மம் மிகவும் சுகம் கொடுக்கக் கூடியது. பாபா சர்வ சக்திவான். நீங்கள் அவருடையவராகிறீர்கள். அனைத்திற்கும் ஆதாரம் நினைவு யாத்திரையாகும். இங்கே நீங்கள் கேட்கிறீர்கள். பிறகு அதைப் பற்றி சிந்திக்கிறீர்கள். எப்படி பசு சாப்பிட்டு விட்டு பிறகு அசை போடுகிறது. வாய் அசைப் போட்டுக் கொண்டே இருக்கிறது. ஞான விசயங்களை நன்கு சிந்தியுங்கள், பாபாவிடம் நாம் என்ன கேட்டோம். பாபா மன்மனாபவ என்று கூறுகிறார். இதன் மூலமாகத் தான் நீங்கள் சதோபிரதானமாக மாறுகிறீர்கள். இந்த குறிக்கோள் நம்முன் இருக்கிறது.

சர்வ குணம் நிறைந்தவர்கள் 16 கலைகளில் நிரம்பியவராக மாற வேண்டும் என அறிகிறீர்கள். இது தானாகவே உள்ளுக்குள் வர வேண்டும். யாரைப் பற்றியும் நிந்திக்கவோ அல்லது பாவ கர்மங் கள் எதுவும் செய்யவோ கூடாது. எந்த ஒரு தவறான காரியங்களும் நீங்கள் செய்யக் கூடாது. இந்த தேவி தேவதைகள் நம்பர் ஒன் ஆவர். முயற்சியினால் உயர்ந்த பதவி பெற்றார்கள் அல்லவா! அவர்களுக்காக தான் அகிம்சா பரமோ தேவ தேவதா தர்மம் என்று பாடப்படுகிறது. யாரையாவது கொல்லுதல் இம்சை அல்லவா! பாபா புரிய வைக்கிறார் எனவே குழந்தைகள் நாம் எப்படி இருக்கிறோம், பாபாவை நாம் நினைக்கிறோமோ, எவ்வளவு நேரம் நாம் நினைக்கிறோம் என உள்நோக்கு முகத்தில் இருந்து தன்னையே பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு மனதில் ஈடுபாடு இருந்தால் ஒரு போதும் நினைவு மறக்காது. ஆத்மாக்களாகிய நீங்கள் என்னுடைய வாரிசுகள் என எல்லையற்ற தந்தை கூறுகிறார். இருப்பினும் நீங்கள் அனாதி குழந்தைகள். அங்கே பிரியதர்ஷன், பிரியதர்ஷினிகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுடையது உடல் சம்மந்தமான நினைவுகள். மனதில் காட்சிகள் கிடைத்து பிறகு மறைந்த போவது போல அவர்களும் எதிரில் வருகிறார்கள். அந்த குஷியில் சாப்பிட்டாலும், குடித்தாலும் நினைவு செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் உங்களுடைய இந்த நினைவில் நிறைய பலம் இருக்கிறது. ஒரு தந்தையை நினைவு செய்துக் கொண்டே இருப்பார்கள். மேலும் உங்களுக்கு உங்களுடைய எதிர்காலம் நினைவு வரும். வினாசத்தின் காட்சிகள் கூட கிடைக்கும். இன்னும் போகப்போக சீக்கிரம் சீக்கிரமாக வினாசக் காட்சிகள் கிடைக்கும். வினாசம் நடக்கப் போகிறது, தந்தையை நினையுங்கள் என நீங்கள் கூற முடியும். பாபா அனைத்தையும் விட்டு விட்டார். கடைசியில் எதுவும் நினைவில் வரக் கூடாது. இப்போது நாம் நம்முடைய இராஜ்யத்திற்குச் செல்ல வேண்டும். புது உலகத்திற்கு நிச்சயம் போக வேண்டும். யோக பலத்தால் அனைத்து பாவங்களையும் எரிக்க வேண்டும். இதில் மிகவும் கடினமாக முயற்சி செய்ய வேண்டும். அடிக்கடி பாபாவை மறந்து போகிறீர்கள். ஏனென்றால் இது மிகவும் நுணுக்கமான விசயம் ஆகும். பாம்பு, குளவி போன்றவற்றின் எடுத்துக் காட்டுகள் அனைத்தும் இச்சமயத்தின் எடுத்துக் காட்டுகள் ஆகும். குளவி அதிசயம் செய்கிறது அல்லவா! அதை விட உங்களுடைய அதிசயம் அதிகம் ஆகும். ஞானத்தின்

ரீங்காரம் இடுங்கள் என பாபா எழுதுகிறார் அல்லவா! கடைசியில் விழித்துக் கொள்வார்கள். எங்கே போவார்கள். உங்களிடம் தான் வருவார்கள். சேர்ந்துக் கொண்டே இருப்பார்கள். உங்களுடைய பெயர் பிரசித்தமாகும். இப்போது நீங்கள் கொஞ்சம் பேர் தான் அல்லவா. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஞானத்தை நன்கு சிந்தனை செய்ய வேண்டும். என்ன கேட்டீர்களோ அதை அசை போட வேண்டும். பாபாவை மறக்க முடியாத அளவிற்கு அவரிடம் மனம் ஈடுபட்டிருக்கிறதா என உள்நோக்கு முகத்தில் இருந்து பார்க்க வேண்டும்.

2. எந்த ஒரு கேள்வி முதலானவற்றைக் கேட்டு அதில் தனது நேரத்தை வீணாக்காமல் நினைவு யாத்திரையினால் தன்னை தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். கடைசி நேரத்தில் ஒரு பாபாவின் நினைவைத் தவிர வேறு எந்த சிந்தனையும் வராமலிருக்க இப்போதிலிருந்தே பயிற்சி செய்ய வேண்டும்.

வரதானம் : உறுதியான எண்ணம் எனும் விரதம் மூலமாக உள்ளுணர்வுகளை மாற்றம் செய்யும் மகான் ஆத்மா ஆகுக !

மகான் ஆத்மா ஆவதற்கு முக்கிய ஆதாரம் தூய்மை இந்த தூய்மை எனும் விரதத்தை உறுதி மொழியாக தாரணை செய்து மகான் ஆத்மா ஆக வேண்டும். உறுதியான எந்த ஒரு எண்ணமும் உள்ளுணர்வை மாற்றி விடுகிறது. தூய்மையெனும் விரதத்தை கையாள்வது என்பது தனது உள்ளுணர்வை உயர்த்துவதாகும். விரதம் என்பது பத்தியம் இருப்பேன் என மனதில் உறுதி செய்வ தாகும். ஆக தூய்மை ஆவதற்காக நாம் ஆத்மாக்கள் சகோதர, சகோதரர்கள் எனும் விரதம் எடுத்துள்ளீர்கள். இந்த பிராமணர்கள் மகான் ஆத்மா ஆகியுள்ளீர்கள்.

சுலோகன்: வீணானவற்றிலிருந்து தப்பிக்க வாயில் திட சங்கல்பம் எனும் பட்டன் போட்டு விடுங்கள்.